**செய்தி வெளியீடு எண்: 075** **நாள் : 03.02.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களின் சிறப்புமிகு திட்டங்களின் ஒன்றான மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து இன்று (3.2.2016) மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களது சிறப்புமிகுந்த திட்டங்களில் ஒன்றான ''மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்'' குறித்து மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்களின் தலைமையில் ஆய்வுக் கூட்டம் இன்று (3.2.2016) சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்த ஆயிரமாண்டின் வளர்ச்சி இலக்கிற்கு இயைந்தவாறு மாணவர்களின் திறனை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகள், ஆகியவற்றில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்க உத்தரவிட்டு,

இத்திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள், 2011ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 அன்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழாவின்போது, திருவள்ளூர் மாவட்டம், காக்களூரில், தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களது ஆணைப்படி 2011–12 முதல் 2015–16 ஆம் ஆண்டுகளில் இத்திட்டத்திற்காக ரூ.6456.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 31,76,018 மடிக்கணினிகள் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டு 100 சதவீத இலக்கினை அடைந்து இத்திட்டம் நிறைவு பெற்றுள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் கொ. சத்யகோபால், இஆப, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. அதுல் ஆனந்த், இ.ஆ.ப. அவர்கள், பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன் அவர்கள், மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**